# கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,

# அருப்புக்கோட்டை.

# அசல் வழக்கு எண். 56/2024

**வா.சா.1**- நீதிமன்றத்தில் மீண்டும் ஆஜராகி சத்திய பிரமாணம் செய்யப்பட்டு, குறுக்கு விசாரணை - நாள் 29-06-2026

பெயர் = அழகம்மாள் **வா.சா.1**

**வா.சா.1** நீதிமன்றத்தில் மீண்டும் ஆஜராகி 1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் கு.வி.-

(1) என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் எனது கணவருடைய குடும்ப அட்டையா என்றால் சாட்சி மேற்படி ஆவணத்தை பார்த்துவிட்டு, மேற்படி ஆவணத்திலுள்ள புகைப்படத்தில் உள்ள நபர் எனது கணவர் என்றும், எனது கணவரின் குடும்ப அட்டை என்றும் சாட்சியமளித்தார். மேற்படி ஆவணம் **பி.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது .** மேற்படி ஆவணத்தில் 3 வது பக்கத்தில் உள்ள புகைப்படத்தை சாட்சியிடம் காண்பித்து இறந்துபோன ராமரின் புகைப்படமா என்று கேட்டபோது சாட்சி ஆமாம் என்று சாட்சியமளித்தார். எனது கணவர் பெயர் பழனி, எனது பெயர் அழகம்மாள், ராமர், கணேசன், இந்திரா ஆகியோர் பெயர் குறிப்பிட்டுதான் மேற்படி பி.சா.ஆ.1 ஆவணமான குடும்ப அட்டை வழங்கப்பட்டது என்றால் சரிதான்.

(2) எனது கணவர் பழனி இறந்தபின்பு எனது மகன் ராமரை குடும்பத் தலைவராக நியமித்து குடும்ப அட்டை வழங்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி பி.சா.ஆ.1 ஆவணத்தில் தனி வட்டாட்சியர் குடிமை பொருள் வட்டாட்சியர், அருப்புக்கோட்டை உத்தரவின் பேரில் 1 முதல் 3 பிரதிவாதிகளை குடும்ப உறுப்பினர்களாக சேர்க்கப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. 1ம் பிரதிவாதி இறந்துபோன எனது மகன் ராமனின் மனைவி என்றும், 2 மற்றும் 3 பிரதிவாதிகள் எனது மகன் ராமனின் பிள்ளைகள் என்றும் எனக்கு நன்கு தெரிந்திருந்தும் வழக்கிற்காக தெரியாது என்று பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது மகன் ராமர் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகத்தில் ஓட்டுனராக பணிபுரிந்து வந்தார் என்றால் சரிதான்.

SIVARANJINI P
Digitally signed by SIVARANJINI P
Date: 2026.06.29 18:30:52 +0530

(3) மேற்படி ராமர் கடந்த 12.12.2021ம் தேதி பணியிலிருக்கும்போது, நெஞ்சுவலி ஏற்பட்டு இறந்துவிட்டார் என்றால் சரிதான். நெஞ்சுவலி ஏற்பட்டதால் எனது மகன் ராமரை மதுரை வேலம்மாள் மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார் என்றால் சரிதான். நான் மேற்படி மருத்துவமனைக்குச் சென்றேனா என்றால் சென்றேன். மேற்படி மருத்துவமனையில் ராமருக்கு மருத்துவ உதவி அளித்தும் பலனின்றி அன்றைய தேதியிலேயே ராமர் இறந்துவிட்டார் என்றால் சரிதான். ராமர் இறந்துவிட்டார் என்று கூறி மருத்துவமனையிலிருந்து இறப்பு சம்மந்தபட்ட மருத்துவச் சான்றிதழ் எதுவும் வழங்கினார்களா என்றால் வழங்கினார்கள். மேற்படி மருத்துவச் சான்றிதழில் எனது மகன் ராமர் திருமணம் முடித்தவர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

(4) ராமர் இறந்தபின்பு அவரது உடலை அவரது மகன் என்ற அடிப்படையில் 3ம் பிரதிவாதியிடம் ஒப்படைத்தனர் என்றால் சரியல்ல, எங்களிடம்தான் ஒப்படைத்தார்கள். 3ம் பிரதிவாதி ராமரின் மகன் என்றும், அவரிடம்தான் ராமரின் உடலை ஒப்படைத்ததற்கு அத்தாட்சியாக மருத்துவமனையிலிருந்து ரசீது கொடுக்கப்பட்டதென்றும், மேற்படி விபரம் எனக்கு தெரிந்திருந்தும் வழக்கிற்காக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது மகன் ராமர் இறந்தபின்பு அவரது உடலை எங்கு அடக்கம் செய்தேன் என்றால் மஞ்சம்பட்டியில் அடக்கம் செய்தோம். இறந்துபோன ராமருக்கு அவரது மகன் என்ற அடிப்படையில் 3ம் பிரதிவாதிதான் இறுதிச்சடங்குகளை செய்தார் என்றால் இல்லை. அதேபோல் 1 மற்றும் 2 பிரதிவாதிகளும் இறந்துபோன ராமருக்கு இறுதி சடங்குகள் செய்தார்கள் என்றால் இல்லை.

(5) இறந்துபோன ராமருக்கு 1 முதல் 3 பிரதிவாதிகள் தான் இறுதிச் சடங்குகள் செய்தனர் என்றும், மேற்படி விபரம் எனக்கும், எனது ஊர் மக்களுக்கும் நன்கு தெரியும் என்றும், ஆனால் எனது மகனின் இறந்துபோன பணப்பலன்களை நான் மட்டும் அடைய வேண்டுமென்ற எண்ணத்தில் பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. இறந்துபோன ராமருக்கு இறப்புச் சான்றிதழை மதுரை, வேலம்மாள் மருத்துவமனையிலிருந்து கொடுக்கப்பட்ட இறப்பு சம்மந்தமான சான்றிதழை வைத்துத்தான் பெற்றேன் என்றால் சரிதான். முதன்முதலில் இறந்துபோன ராமருக்கு வழங்கப்பட்ட இறப்புச் சான்றிதழில் மனைவி என்ற இடத்தில் 1ம் பிரதிவாதி செல்லம்மாளின் பெயர் இடம் பெற்றிருந்தது

SIVARANJINI P
Digitally signed by SIVARANJINI P
Date: 2026.06.29 18:30:59 +0530

என்றால் இல்லை. ராமருக்கு முதன்முதலில் இறப்புச் சான்றிதழ் வாங்கும்போது 1ம் பிரதிவாதியின் பெயர் குறிப்பிட்டுதான் இறப்புச் சான்றிதழ் வழங்கப்பட்டது என்றும், மேற்படி விபரம் தெரிந்திருந்தும் பணபலனுக்காக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

(6) மேற்படி இறப்புச் சான்றிதழின் அடிப்படையில்தான் 1 முதல் 3 பிரதிவாதிகளும், நானும் சேர்ந்து இறந்துபோன ராமரின் வாரிசு சான்றிதழுக்காக விண்ணப்பம் செய்து 24.12.2021ம் தேதி வாரிசு சான்றிதழ் வழங்கப்பட்டது என்றால் சரிதான். அதன்பின்பு 1 முதல் 3 பிரதிவாதிகளும், நானும் தமிழ்நாடு போக்குவரத்துக் கழகத்தில் நாங்கள் தான் இறந்துபோன ராமரின் வாரிசுகள் என்று குறிப்பிட்டு அபிடவிட் தாக்கல் செய்தோம் என்றால் சரியல்ல. சாட்சியிடம் பிராதில் உள்ள கைரேகையை காண்பித்து மேற்படி கைரேகை என்னுடையதா என்று கேட்டபோது சாட்சி தெரியாது என்று சாட்சியமளித்தார். சாட்சியிடம் முதல் விசாரணை வாக்குமூலத்திலுள்ள கைரேகையை காண்பித்து என்னுடைய கைரேகையா என்று கேட்டபோது சாட்சி தெரியாது என்று சாட்சியமளித்தார்.

(7) இறந்துபோன ராமரின் பணத்தை அபகரிக்க வேண்டுமென்ற கெட்ட நோக்கத்தில் என்ன பொய் வேண்டுமானாலும் நான் சொல்லுவேன் என்றால் சரியல்ல. நானும், 1 முதல் 3 பிரதிவாதிகளும் சேர்ந்துதான் தமிழ்நாடு போக்குவரத்து கழகத்தில் இறந்துபோன ராமரின் பணபலன்களை எங்கள் நான்குபேரிடமும் கொடுக்குமாறு மனு செய்தோம் என்றால் சரியல்ல. வருவாய் கோட்டாட்சியரிடம் ஏற்கனவே வழங்கப்பட்ட வாரிசு சான்றிதழ் செல்லாது என்றும், நான் தான் இறந்துபோன ராமரின் வாரிசு என்றும், வாரிசு சான்றிதழ் வழங்கக்கோரி மனு தாக்கல் செய்தேனா என்றால் தாக்கல் செய்தேன். மேற்படி மனுவின் அடிப்படையில் வருவாய் கோட்டாட்சியர் ஒரு உத்தரவு பிறப்பித்தார் என்றும், மேற்படி உத்தரவைத்தான் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

(8) மேற்படி வருவாய் கோட்டாட்சியரின் உத்தரவின் அடிப்படையில் நான் மட்டும் இறந்துபோன ராமரின் வாரிசு என்று வாரிசு சான்றிதழ் வழங்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி உத்தரவின் அடிப்படையில் இறந்துபோன ராமரின் முதலில் வழங்கப்பட்ட இறப்பு சான்றிதழில் 1ம் பிரதிவாதியின் பெயர் நீக்கப்பட்டது என்றால் நீக்கம் செய்யவில்லை. மாவட்ட வருவாய் அலுவலர் உத்தரவில் நானும், 1 முதல் 3 பிரதிவாதிகளும் நீதிமன்றம் மூலம் பரிகாரம் தேடிக்கொள்ளுமாறு

SIVARANJINI P
Digitally signed by SIVARANJINI P
Date: 2026.06.29 18:31:06 +0530

குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மேற்படி மாவட்ட வருவாய் அலுவலர் பிறப்பித்த உத்தரவிலேயே ஏற்கனவே வழங்கப்பட்ட வாரிசு சான்றிதழ்கள் இரத்து செய்யப்பட்டது என்ற விபரமும் எனக்கு தெரியும் என்றால் சரியல்ல. என்னிடம் காண்பிக்கப்படும் புகைப்படத்தில் இருப்பது நானா என்றால் இல்லை.

(9) என்னிடம் காண்பிக்கப்படும் புகைப்படத்தில் இருப்பது எனது மகனா என்றால் இல்லை. என்னிடம் காண்பிக்கப்படும் புகைப்படத்தில் இருப்பது எனது மகனா என்றால் இல்லை. எனது மகன் ராமரின் புகைப்படத்தை பார்த்து எனது மகன் இல்லை என்று அவரது பணத்தை அபகரிக்க வேண்டுமென்ற கெட்ட எண்ணத்தில் பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. என்னுடைய பேத்தியின் பெயர் ராசாத்தியா என்றால் தெரியாது. பிராதில் என்ன விபரம் கூறி இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் எனது மகன் இறந்துவிட்டார் என்று கூறி தாக்கல் செய்துள்ளேன். எனது மகன் ராமர் தமிழ்நாடு போக்குவரத்து கழகத்தில் பணிபுரிந்து வந்து இறந்துவிட்டதால், மேற்படி கழகத்திலுள்ள எனது மகனின் இறப்பு பணப்பலன்களை பெறுவதற்காக இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளதால், தழிழ்நாடு அரசு போக்குவரத்து கழகத்தையும் இவ்வழக்கில் ஒரு தரப்பினராக சேர்க்க வேண்டுமென்றும், ஆனால் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகத்தை இவ்வழக்கில் தரப்பினராக சேர்க்காததால் இவ்வழக்கு அவசிய தரப்பினரை சேர்க்காத தோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

(10) குறைந்த நீதிமன்ற கட்டணம் செலுத்த வேண்டும் என்பதற்காக Succession Original Petition தாக்கல் செய்வதற்கு பதிலாக இவ்வழக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. இறந்துபோன ராமரின் புகைப்படத்தை நான் நீதிமன்றதில் தாக்கல் செய்யவில்லை என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. எனது மகன் ராமரும், 1ம் பிரதிவாதி செல்லம்மாளும் காதலித்து வந்த நிலையில், மேற்படி காதலை இருவீட்டாரும் ஏற்றுக்கொள்ளாததால், 1ம் பிரதிவாதி செல்லம்மாள் முனியாண்டி என்பவரை கட்டாய திருமணம் செய்து கொண்டு, அவ்விருவருக்கும் இடையில் கருத்து வேறுபாடு ஏற்பட்டு, ஜாதி முறைப்படி விவாகரத்து செய்து கொண்டார் என்றும், அதன் பின்பு 1ம் பிரதிவாதி செல்லம்மாள் ராமரை சௌராசுப்புராம் கோவிலில் வைத்து திருமணம் செய்து கொண்டார் என்றும், மேற்படி திருமணத்தில் நானும் கலந்து கொணடேன் என்றும், மேற்படி திருமண உறவின் மூலமாகத்தான் 2 மற்றும் 3 பிரதிவாதிகள் பிறந்தார்கள் என்றும், ஆகையால்தான் 2

SIVARANJINI P
Digitally signed by SIVARANJINI P
Date: 2026.06.29 18:31:12 +0530

மற்றும் 3 பிரதிவாதிகளின் பிறப்புச் சான்றிதழ், கல்விச் சான்றிதழ் மற்றும் அனைத்து அரசு ஆவணங்களிலும் தந்தை பெயர் ராமர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், 2005 ம் வருடம் என்னுடைய கணவர் இறந்தபின்பு நானும், 1 முதல் 3 பிரதிவாதிகளும் மஞ்சம்பட்டியில் கூட்டுக் குடும்பமாக வாழ்ந்து வந்தோம் என்றும், ராமர் இறந்தபின்பு மனைவி என்ற அடிப்படையில் 1ம் பிரதிவாதிதான் ராமர் பெற்ற அனைத்து கடன்களையும் அடைத்தார் என்றும், மேற்படி விபரங்கள் அனைத்தும் தெரிந்திருந்தும், உண்மைகளை மறைத்து வழக்கிற்காக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

**4 மற்றும் 5 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

**1)** எனது மகனும், 1ம் பிரதிவாதியும் எத்தனை வருடங்களாக ஒன்றாக வாழ்ந்து வந்தார்கள் என்றால் அவ்விருவரும் ஒன்றாக வாழ்ந்து வரவில்லை. 1ம் பிரதிவாதி செல்லம்மாளுக்கு எத்தனை பிள்ளைகள் என்றால் இரண்டு பிள்ளைகள். எனது மகனிற்கு வாரிசு சான்றிதழ் கேட்டு யார் மனு கொடுத்தது என்றால் நான்தான் மனு கொடுத்தேன். மேற்படி மனுவிற்கு யாரை வாரிசு என்று குறிப்பிட்டு வருவாய் வட்டாட்சியர் வாரிசு சான்றிதழ் வழங்கினார் என்றால் நான் தான் வாரிசு என்று குறிப்பிட்டார். செல்லம்மாள் பெற்ற வாரிசு சான்றிதழை ரத்து செய்யக்கோரி யார் மனு செய்தார்கள் என்றால் யாரும் மனு தாக்கல் செய்யவில்லை.

மறுவிசாரணை இல்லை.

SIVARANJINI P

Digitally signed by SIVARANJINI P
Date: 2026.06.29 18:31:16 +0530